5 பைசாவாக உயர்த்த வேண்டுமென்று பஸ் அதிபர்கள் கூட கோரிக்கைகளை அரசாங்கத்திற்கு அனுப்பிக் கொண்டிருந்தார்கள். பிரதமர் கூட இந்த அடிப்படையிலே பேசும்பொழுது டீசல் கட்டணத்தைக் குறைத்திருக்கிறோம், இருந்தாலும் எல்லா போக்கு வரத்து நிறுவனங்களும் பஸ் கட்டணத்தை உயர்த்தியிருக் கிறார்கள் என்று தான் சொல்லியிருக்கிறார்கள். உயர்த்தியது தவறு என்று அவர்கள் சொல்லவில்லை. உயர்த்தியதற்கு என்ன காரணம். ஸ்பேர் பார்ட்ஸ் அதிக விலை ஆகிக் கொண்டே போகிறது. பம்பாயிலே இருக்கிற மாநகரப் போக்குவரத்துக் கழகம் கூட 15 பைசா என்ற குறைவான கட்டணத்தை வைத்துக் கொண்டு ஒரு ஸ்டேஜுக்கு 10 பைசா என்று போட்டிருக்கிறார்கள். ஆனால், நாம் ஒவ்வொரு ஸ்டேஜுக்கு 5 பைசா என்று சென்னையிலே உயர்த்தலாம் என்றிருக்கிறோம். பஸ் தொழிலை நடத்துவதற்கு ஏற்ற வகையில் குறைந்த விலையில் தரமான ஸ்பேர் பார்ட்ஸ் கிடைக்க முடியாத ஒரு நிலைமை இந்திய உப கண்டத்திலே ஏற்பட்டிருக்கிறது. நாம் 10, 15 பைசா என்று வசூலித்தால் கூட அது யாருக்குப் போய் சேருகிறது என்றால் முதலாளிகள் நடத்து கின்ற தொழிற்சாலைகளுக்கு இலாபமாகவும், மற்ற வகையிலும் போய்ச் சேருகிறது. ஆகவே, இன்றைக்கு இருக்கிற பொருளாதார அமைப்பில் எல்லா பொருட்களின் விலைகளையும் கூடிக் கொண்டிருக்கும் பொழுது அதைக் கட்டுப்படுத்த மாநில மத்திய அரசுகளால் இயலாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கும் பொழுது, அதற்கு வேண்டிய செலவைச் சரிக்கட்ட புது வரி போட வேண்டிய சூழ்நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறோம் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு, 1973 ஆம் ஆண்டு, சம்பளம் வழங்குதல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, தமிழ் நாடு, 1973 ஆம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகப்படுத்த நான் அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

1973 நவம்பர் 30]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இச்சட்ட முன்வடிவை நான் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு, 1973 ஆம் ஆண்டு, உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1973).

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவை* (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 33/1973) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்"

என்று நான் முன்மொழிகிறேன்.

இச்சட்ட முன்வடிவை முன்மொழிகையில், தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 52/1961) 5-வது பிரிவு, ஓர் உள்ளாட்சி அதிகார மன்றம், அரசின் முன் அனுமதி பெற்று ஒரு கேளிக்கை அல்லது கேளிக்கையின் வகை மற்றும் திரைப்படக்காட்சி அல்லது திரைப்படக்காட்சியின் வகைக்கான நுழைவுக் கட்டணங்களைப் பொறுத்தவரையில், மேற்படி சட்டத்தின் 3-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் முறையே (எ) & (பி) பகுதிகளின்கீழ் வரி செலுத்துவதற்குள்ள பொறுப்பினின்றும் விலக்களிக்க அதிகாரம் அளிக்கிறது என்பதைக் கூறிக்கொள்ள விழைகிறேன். தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) 8-வது பிரிவு கேளிக்கை வரியைப் பொறுத்தவரையில் விலக்கு அளிக்க அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது. ஆனால், தமிழ் நாடு 1961 ஆம் ஆண்டு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதிச் சட்டத்தின் 3-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (எ) & (பி)

---

* 27—11—1973 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.